# கம்பராமாயணத்தில் மெய்நெறி கண்ட பரதன்

***ஜா. விமலாதேவி, எம். ஏ., பிட்.,***
பதிவு எண் : 207218TP109
இளம் முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் கலைக்கல்லூரி,
மயிலாடுதுறை

***முனைவர் சு. விமலா, எம்.ஏ., எம்ஃபில்., பி.எச்.டி.,***
விரிவுரையாளர், தமிழ்த்துறை
தருமபுரம் ஞானாம்பிக்கை அரசினர் மகளிர்
மயிலாடுதுறை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6463

***முன்னுரை***

*“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று, துன்பத்தால் துவளும் உயிர்கட்கு, அவர்கள் அன்பால் காட்ட விழைந்த விளைவுகளே இலக்கியங்கள் ஆயின, இதிகாசங்கள் ஆயின. அவ்வாறு, உலகத்து மக்கட்கு இன்பம் பெற ஆக நெறி இவை” ஆகா நெறி இவையென்று அறிவிக்க முயன்ற சான்றோர்களுள் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானும் ஒருவர் ஆவார். தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பரின் காலத்தில் உச்சநிலையினை அடைந்தது என்பர். இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் “தமிழுக்குக் கதி” என்பர். அப்படிப்பட்ட கம்பராமாயணத்தில் அறம் பெருக வாழ்ந்த இராமனுக்கு இணையான கதாபாத்திரமாக பரதனைப் படைத்து துன்பத்திலும் இன்பம், இறக்கத்திலும் ஏற்றம் என்று உலகமாந்தர் உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்து வருபவன் பரதன். அவனுடைய அளவிலாத அருட்பெருஞ் செயல்களை இவ்வியலில் காண்போம்.*

**கம்பராமாயணம் - சொற்பொருள் விளக்கம்**
**கம்பர் இராமன் அயனம்**

கம்பராமாயணம் எனும் நூல் கம்பரால் ஆதி காவியம் என்றழைக்கப்படும் வான்மீகி இராமாயணத்தைத் தமிழர் பண்பாடு மாறாமல் வழிநூலாக அல்லாமல் முதல்நூலாக எழுதிய சிறப்பு வாய்ந்த ஒரு நூலாகும்.

கம்பர், இராமனது பயணத்தைப் பற்றிக் கூறுவதாலும், கம்பரின் கவித்திறனை இவ்வுலகோர் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் இந்நூலானது கம்பரின் பெயரிலேயே “கம்பராமாயணம்” என்று அழைக்கப்படுகின்றது.

மேலும் தமிழ்நாட்டின் கவிச்சிறப்பையும் கல்விச் சிறப்பையும் கூற நினைக்கும் பாரதியாரும்

**"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு"**

என்று கம்பனின் கல்விச் சிறப்பை அறிந்துகொள்ளும்படி பாடியுள்ளார்.

கம்பன் சோழ நாட்டில் 1180 ஆம் ஆண்டு ஆதித்தன் என்பவருக்கு மகனாக பிறந்தார் . கம்பர் (பொது ஆண்டு) 12 - ஆம் நூற்றாண்டில் மயிலாடுதுறை மாவட்டம் தேரெழுந்தூரில் பிறந்தவர். கம்பரைச் சடையப்ப வள்ளல் என்பவர் ஆதரித்து வந்துள்ளார். பின்னரே சோழ மன்னன் கம்பரை ஆதரித்து வந்ததாகவும் கூறுகின்றனர்.

**கம்பராமாயணம் குறித்த அறிஞர்கள் கருத்து**

**"காலமெனும் ஆழியிலும்**
**காற்றுமழை ஊழியிலும்**
**சாகாது கம்பனவன் பாட்டு - அது**
**தலைமுறைக்கு எழுதிவைத்த சீட்டு**
**பத்தாயிரம் கவிதையை**
**முத்தாக அள்ளிவைத்த**
**கத்தான கம்பனுக்கு ஈடு - இன்னும்**
**வித்தாக வில்லையென்று பாடு!"**

என்று கவியரசர் கண்ணதாசன் கம்பரைக் குறித்தும் அவரின் கவிதை நடைக்குறித்தும் கூறியுள்ளார்.

**"யமெறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவனைப் போல்**
**இளங்கோவைப் போல்**
**புமிதனில் யாங்கெனுமே பிறந்ததில்லை"**
**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை**

என்று ஏழு மொழிகளைப் பிழையின்றி கற்றுத் தெளிந்த மகாகவியும் கூட கம்பனை முதலில் வைத்து போற்றியதைப் பார்க்கும்பொழுது கம்பரின் கவித்திரம் "உள்ளங்கை நெல்லிக்கனி" போல தெள்ளத் தெளிவாகிறது

அடுத்ததாக,

**"கம்பநாடன் கவிதையிற் போற்**
**கற்றோர்க்கு இதயம் கனியாதே"**

என்று நாமக்கல் கவிஞர் "மலைக்கள்ளன்" என்ற நூலில் பாடியுள்ளார். இந்நூலில் காவலாளிகள் கம்பராமாயணத்தில் உள்ள விசயங்களையே தங்கள் சமிக்கை வாச கங்களாகக் கூறும் பொழுது நாமக்கல் கவிஞரின் திறமையையும் அவருக்குக் கம்பனிடமுள்ள அபார பக்தியையும் காணமுடிகிறது.

"தமிழுக்கு கதிசுசு என்று இரண்டு நூல்களை திருமணம் செல்வ கேசவராய முதலியார் கூறுவதிலிருந்து "க" என்பது கம்பராமாயணத்தையும். "தி" என்பது திருக்குறளையும் கூறுவதாக அமைந்து உள்ளது நாம் அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

**கோசலை - பரதனை வாழ்த்திய இடங்கள்**

**நகர் நீங்கு படலம்**

**"நின்னினும் நல்லன்".**

"மலையைப் போன்ற இராமன் முடி சூட்டிக்கொண்டு வருவான்சுசு என்று எதிர்பார்த்து காத்திருந்த கோசலையின் முன்னே இராமன், தன் தாயின் மலர்ப்பாதம் தொட்டு வணங்கினான். அவனை வாழ்த்தி விட்டு முடிசூட்டிக் கொள்ளாமல் என்னிடம் வருவதற்கு நீ நினைத்தது ஏன்? பெரிய மகுடத்தை நீ சூட்டிக்கொள்வதற்கு ஏதேனும் தடை ஏற்பட்டுள்ளதா? என்று வினவினார்.

இராமன், தன் சிவந்த கைகளைக் கூப்பிக் கொண்டு அன்புக்குரிய சிறந்த மகனும் என் தம்பியும் குறையற்ற நிறை குணத்தவனான பரதனே பெருமை மிகுந்த மகுடத்தைச் சூட்டிக் கொள்கிறான்," என்றான்.

இராமன் கூறியதைக் கேட்டதும்,

**"முறைமை அன்று என்பது ஒன்று உண்டு**
**மும்மையின்**
**நிறை குணத்தவன் நின்னினும்**
**நல்லனால்"**

மூத்தவனே முடிசூட வேண்டும் என்னும் முறைமைக்கு இது மாறாக உள்ளது என்னும் ஒரு குறை இருக்கிறது. மற்றபடி, பரதன்

**"உன்னைக் காட்டிலும் மூன்று மடங்கு நிறைந்த குணங்களை உடையவன்"**

என்று நான்கு புதல்வர்களிடமும் குற்றமற்ற அன்பு செலுத்துவதில் வேற்றுமை காட்டாத கோசலை கூறினாள்.

பெற்ற பிள்ளையிடமே வளர்ப்பு பிள்ளையான பரதனின் நற்குணங்களைக் கூறுவதில் பரதனின் பண்பு நலன்களையும் மெய்நெறி கண்ட பரதன் என்பதனை அறிந்து கொள்ளும்விதமாக கோசலையின் மூலம் உயர்த்தி காட்டுகிறார் கம்பர்.

**பள்ளியடைப் படலம்**

**"மன்னர் மன்னவா"**

நற்குடிப்பிறப்பு, பொறுமை, கற்பு ஆகிய குணங்களைக் கொண்ட கோசலை, புலம்புகின்ற பரதனது துயரத்தை நேரில் கண்டாள். பரதனும் கைகேயியின் சூழ்ச்சிக்குத் துணையாக இருந்திருப்பான் என்று நினைத்ததால் ஏற்பட்ட சினத்தை நீக்கிக் கொண்டு, "ஐயனே! கேகய அரசனின் புதல்வியான கைகேயி செய்த வஞ்சகத்தை நீ முன்னமே அறியவில்லை போலும்" என்று கூறினாள்.

கோசலையின் திருவடியில் விழுந்து கிடக்கும் பரதன், அத்தாய் கூறிய சொல்லைக் கேட்டவுடனே பிறரால் கூண்டினில் பிடிக்கப்பட்ட சிங்கம் போல குமுறி, விம்மி அழுதான். தருமதேவதை நடுங்க தனது நாவினாலே சப்தமாக அமையும் உறுதி மொழிகளை உரைக்கத் தொடங்கினான். கைகேயின் வஞ்சக செயலை என் நெஞ்சம் முன்னரே அறிந்திருந்தால்,

**"அறம் கெட முயன்றவன் அரன் இல் நெஞ்சினன்**
**பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினோன்**
**மறம்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்**
**துறந்த மா தவர்க்கு அருந் துயம் சூழ்ந்துள்ளோன்"**

எனத் தொடங்கி பதினாறு பாடல்களில் தன்னுடைய எண்ணங்களைத் தாயின்முன் வைக்கிறான் மனத் தூய்மையான பரதன்.

மேற்கூறிய அனைத்து பாவங்களும் என்னை வந்து சேரட்டும் என்று கூறி அழுது நின்றாள் பரதனின் பண்புச் சிறப்பை நினைக்க நினைக்க மனம் இளகி உருகுகின்ற கோசலை, "அரசர்க்கு அரசனே! பழமையான உனது குலத்திலே முதன்மை பெற்றிருந்தவர்களுள் உன்னை ஒத்த உயர்வு பெற்றவர் எவர்? ஒருவரும் இல்லை" என்று கூறி அப்பரதனைப் பாராட்டி வாழ்த்தினாள். இதனையே கம்பர்,

**"முன்னே நும் குல முதலுனோர்கள்தாம்**
**நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்**
**மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்**
**உன்ன உள்ள நைந்து உருகி விம்முவாள்"**

என்று தனது மனதார வாழ்த்துகிறான். இவையெல்லாம் உணர்ச்சி பெருக்கால் கோசலை கூறியதன்று, பரதனின் உள்மனதில் உள்ள எண்ணங்களைக் குறிப்பினால் அறிந்ததால் கூறியதாகும். இவ்விதமாகவும் கம்பர் பரதனைக் கோசலையைக் கொண்டே இரண்டாவது முறையாக உயர்த்தி வாழ்த்தியதைக் காண்கிறோம்.

**மீட்சிப்படலம்**

"எண் இல் கோடி இராமர்கள் என்னினும்,"

பதினான்கு ஆண்டுகள் கழித்து வருவேன் என்று சொல்லி தம்பியை அயோத்திக்கு அனுப்பினான் இராமன்.

பதினான்கு ஆண்டுகள் முடியப் போகிறது. கடைசி நாள், இராமன் வந்தானில்லை. இராமன் வராததால் பரதன் தீ வளர்த்து அதில் குதித்து உயிர் விடுவேன் என்று கூறி தீயில் விழத் துணிகிறான்.

அப்போது கோசலை, ஓடி வருகிறாள். ("நின்னினும் நல்லன் என்றே: என்று இராமனைப் பார்த்து கூறிய கோசலைப் பரதனைப் பார்த்து,

**"எண் இல் கோடி இராமர்கள் என்னினும்**
**அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?**
**புண்ணியம் எனும் நின் உயிர் போயினால்**
**மண்ணும் வானும் உயிரிகளும் விழுமோ?"**

அதாவது, "எண்ணிக்கையில் அடங்க முடியாத கோடிக்கணக்கான இராமர்களை ஒன்று சேர்த்தாலும், அண்ணல், உன் அருளுக்கு அருகில் கூட வரமுடியாது. புண்ணியமே வடிவான உன் உயிர் பிரிந்தால் இந்த உலகில் ஓர் உயிரும் வாழாது" என்றாள்.

முதலில் இராமனுக்கு இணையாக இருந்தவன், பின் இராமனை விட நல்லவனாக மாறினான். (நின்னினும் - நல்லன்) பின் இராமனை விட ஆயிரம் மடங்கு உயர்ந்தான் ("ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ") பின் கோடி இராமனை விட உயர்ந்தான் (எண்ணில் கோடி இராமர்) அவள் மனத்தால் உயர்ந்தான். மனம் உயர வாழ்வு உயரும். "வெள்ளந்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு" என்ற குறள் மூலம் பரதனை இங்கு ஒப்பு நோக்கதக்கதாகும்.

### குகனின் வீரவுரை

குகன், தன் வீரர்களை நோக்கி பரதன் எண்ணம் அறியாதவனாய் பின்வருமாறு கூறினான்.

**"ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர்போவாரோ**
**வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ**
**தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ**
**ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ"**

தன்னை தலைமயனாக ஏற்ற இராமனுக்கு ஒரு துன்பம் வந்தால் அதனைத் தடுத் திடுவது தான் என் முதல் கடமையாகும். என்னையும் மீறி எம்பிரானை பரதன் செ ன்று போரிட முடியுமா? அல்லது அதற்கு நான் உடன்படுவனா? என்று தனக்குதானே பல எண்ணங்களுக்கு பதிலுரைத்துக் கொண்டிருந்தான்.

இவ்வுரையில் இராமபிரான் மீது பக்தியும் அன்பும் செறிந்த குகனை நம் கண்முன்னே படைத்துக் காட்டுகிறார் கம்பர். அடுத்ததாக இராமனின் பண்பு நலன்களைக் கொண்டே பரதனை அளவீடு செய்வதையும் அழுத்தமாக காணலாம்.

### பரதன் தோற்றம் கண்டு குகன் வியத்தல்

கங்கையாற்றின் தென்திசையில் நின்றிருந்த குகனை காட்டி, அயோத்தி நகரின் அமைச்சரான சுமந்திரன்,

இக்கங்கையாற்று தலைவன். "உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன் உயர் தோளான்" என்று கூறக் கேட்டதும், பரதன் யானே சென்று அவனைக் காண்பேன் என்று கரிய குகனை நோக்கி சென்றான். வேடர் தலைவனாகிய குகன், தான் கருதியிருந்ததற்கு மாறாக பரதனது உடற்கோலம் அமைந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டான். பின்னர் பின்வருமாறு கூறுகிறான்.

**"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்**
**தம்பியையும் ஓர்கின்றான் தவவேடம் தலை நின்றான்**
**துன்பம் ஒரு முடிவு இல்லை திசை நோக்கி தொழுகின்றான்**
**எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோபிழைப்பு என்றான்"**

இராமனது நிறத்திற்கு ஒத்துள்ளான். இராமனது தவவேடத்தை ஒத்துள்ளான். இராமன் இருக்கும் தென்திசை நோக்கி வணங்குகிறான். எம்பெருமானாகிய இராமனுக்குத் தம்பியாகப் பிறந்தவர் தவறு செய்வார்களா? என்று கருதினார்.

இப்பாடலில் முதலில் தவறுதலாக எண்ணிய குகன், பரதனின் உண்மையான அன்பை அறிந்து கொள்ளும் இடம் இது வாகும். மேலும் தனக்கு தெரிந்த இராமனது குணாதிசயங்களைக் கொண்டு பரதனை அளக்கிறான்.

**பரதனின் பெருந்தகைமையைக் குகன் புகழ்தல்**

இதுவரை பரதனைப் பற்றி தவறுதலாக எண்ணி இருந்ததை நினைத்துப் பெருமூச்சு விட்டான் குகன். பின்னர் பரதனை வணங்கி அரசாளும் உரிமையே உனக்கு எளிதாக கிடைத்த போதிலும் அறவாழ்வு வாழ்பவனான பரதன் அதனை ஏற்காது உலகநாகயனாம் இராமபிரானை நோக்கி வனம் வந்துள்ளதை எண்ணி,

> **"தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணிதன்னை**
> **தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில தேக்கி**
> **போயியனை என்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்**
> **ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா"**

என்று புகழ் சாற்றினான். இங்கு, குகன் பண்பு நலனை மேலும் உயர்த்தி காட்டிய கம்பர், பரதனை உலகம் காக்கும் திருமாலின் அவதாரமான இராமனை விட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர் என்று கூறி வியக்கின்றான்.

இவ்வியலில் இராமனுக்கும் பரதனுக்கும் இடையே உள்ள ஒப்பீடானது 1:1000 மடங்கு என்பது தௌ்ள தெளிவாகிறது. அண்ணன் இல்லாத அயோத்தி நகரத்தை எம் தலையில் கொள்ளமாட்டேன்: தன் தமையனின் காலடிகளே (பாதுகைகள்) இப்பெருமை மிகு நாட்டை ஆளும் தகுதியுடையது என்று பரிபுரணமாக நம்புகிறான், அறமுதல்வனான பரதன்.

**முடிவுரை**

கம்பர் முதன்முதலாக கோசலை வாயிலாகவே பரதன் என்னும் பெருந்தகையாளனை உலகிற்கு உயர்த்திக் காட்டுகிறார். பெற்ற பிள்ளையை விட "மும்மையின் நிறை குணத்தவன்" (296) என்று உயர்த்துகிறாள், அடுத்ததாக "எண் இல் கோடி இராமர்" என்னும் போது கோடி இராமர் உனக்கு இணையாவரோ என்கிறாள். இவ்வாறு பரதனை உயர்த்த உயர்த்த காப்பியத்தில் தனியிடம் பெற்று விடுகிறான் பரதன்.

முதலில் தவறுதலாக எண்ணிய குகனும் ஆயிரம் இராமர் உனக்கு ஈடில்லை என்கிறான். இவ்வாறு பரதனின் உள்ளம் உயர உயர பண்பு நலன்களும் மக்களால் உயர்த்தப்படுகிறான்.

**அடிக்குறிப்புகள்**

1. திருமூலர் அருளிய திருமந்திரம் , ப. 85,
2. பாரதியார் கவிதைகள் , ப. 27,
3. புறநானூறு மூலமும் விளக்கமும், ப. 165.
4. பாரதியார் கவிதைகள் , ப. 27,
5. மலைக்கள்ளன் ப. 15,
6. கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் ப.142,
7. மேலது ப. 416,
8. மேலது ப. 428,
9. மேலது ப. 120,
10. திருக்குறள் தெளிவுரை,
11. கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் ப. 470,
12. மேலது , ப, 474,
13. மேலது . ப. 476,
14. மேலது ப. 480.

**துணைநூற்பட்டியல்**

1. முனைவர். கா. அரங்கசாமி, திருமூலர் அருளிய திருமந்திரம், முதல் பதிப்பு 1 2019, வானதி பதிப்பகம், சென்னை.
2. பத்மதேவன், பாரதியார் கவிதைகள், முதல் பதிப்பு 1 2015, கற்பகம் பதிப்பகம், சென்னை.
3. எஸ்.கௌமாரீஸ்வரி, புறநானூறு மூலமும் விளக்கமும், முதல் பதிப்பு 1, அமுத பதிப்பகம், சென்னை.
4. ச.வே.சுப்பிரமணியன், கம்பராமாயணம் மூலமும், தெளிவுரையும், முதல் பதிப்பு 2018, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.